tamilguru.lk

# ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2026

1. ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் வெற்றிடமாக காணப்படும் முகமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் III ன் பதவி வெற்றிடங்கள் எண்ணிக்கை 76 திறந்த அடிப்படையில் ஆட்ச்சேர்ப்பு செய்வதற்காக பின்வரும் தகைமைகளை உடைய ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவை கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து 2026.06.26 திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பொருந்தும்;

   2.1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
   2.2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 18 வருடங்களுக்கு குறையாததாகவும் 30 வயதுக்கு அதிகமாகாமலும் இருத்தல் வேண்டும். (அதன்படி, 2008.06.26 அன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1996.06.26 திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியினை கொண்டவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கத் தகைமை உடையவர்களாவார்கள்).
   2.3. சிறந்த நடத்தையுடன் கூடியவராக இருத்தல் வேண்டும்.
   2.4. சகல விண்ணப்பதாரர்களும் ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவைப் புரிவதற்கும், பதவியில் கடமைகளை புரிவதற்குமான உடல் மற்றும் உள தகுதிளுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.
   2.5. விண்ணப்பங்கள் கோரப்பட்ட இறுதி திகதியன்று ஊவா மாகாணத்திற்குள் குறைந்தப்பட்சம் தொடர்ச்சியான 03 வருட கால வதிவை உடைய விண்ணப்பதாரர்களாக இருத்தல் வேண்டியதுடன், கிராம அலுவலரினால் வழங்கப்படும் குறித்தொதுக்கப்பட்ட படிவத்தின் ஊடாக வதிவினை சான்றுப்படுத்துதல் வேண்டும்.
   2.6. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.
      2.6.1. மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) மற்றும் கணிதம் உள்ளடங்களாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கா.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
      2.6.2. க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொது பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) சகல பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

      குறிப்பு; க.பொ.த. (சா/த) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டிய மொழியாக கருதப்படுவது விண்ணப்பதாரர் இப்போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சை மொழி மூலமாகும்.

      கருத்தில் கொள்ளவேண்டியது; சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்கான சகல தகைமைகளையும் 2026.06.26 திகதி அல்லது அதற்கு முன்னதாகவோ பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பங்களை முன்வைத்தல்;

   3.1. இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்கள் https://exams.psc.up.gov.lk/ என்ற இணை இணைப்பு வழியாக நிகழ்நிலை விண்ணப்ப அணுலை அணுகி 2026.06.26 திகதியன்று இரவு 11.59 மணிக்குள் அல்லது அதற்கு முன் பரீட்சைக்கான நிகழ்நிலை விண்ணப்ப படிவத்தினை பூரணப்படுத்த வேண்டியதுடன், விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து முறைமைக்கு சமர்ப்பித்த (Submit) பிறகு விண்ணப்பத்தின் மென் பிரதியை (மெனுவில் Applicationனை அணுகவும்) பதிவிறக்கம் செய்துக்கொள்ள வேண்டும். பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் வன் பிரதியில் பரிந்துரைக்கப்பட்ட இடத்தில் பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டி, கையொப்பத்தை சான்றளித்து, 2026.07.03 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் **"செயலாளர், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, எண் 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்கராவை, பதுளை"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உரையின் இடது மேல் மூளையில் **"ஊவா மாகாண அரசாங்க சேவையின் முகாமைத்துவ சேவை**

***உத்தியோகத்தர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2026”*** *என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.*

*3.2. தற்போது மாகாண அரசாங்க சேவையில் அல்லது மத்திய அரசாங்கத்தில் கடமை புரியும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்ப படிவங்களை திணைக்கள தலைவர் ஊடாக சமர்ப்பிக்கவேண்டும்.*

*3.3. அதேபோல, நிகழ்நிலை முறைமையின் ஊடாக சமர்ப்பிக்கப்படும் எந்தவொறு தகவல்களையும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எனவே, ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு (Submit) முன்னர் தகவல்களை அவதானமாக சரிபார்ப்பது முக்கியமாகும். முறையாகப் பூர்த்தி செய்யப்படாத மற்றும் முழுமையற்ற அல்லது தவறான தகவல்களைக் கொண்ட அனைத்து விண்ணப்பங்களும் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது நன்மை பயப்பதானதாக இருக்கும்.*

*3.4. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்ப படிவத்தினை ஆங்கில மொழி மூலத்தில் பூரணப்படுத்த வேண்டும். சிங்களம் மற்றும் தமிழில் பூரணப்படுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்கு மாத்திரம் சரியாக அம்மொழி மூலத்தில் பூரணப்படுத்துதல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் தொடர்பில் தயாரிக்கப்பட்ட பொது அறிவுறுத்தல்கள் பத்திரம் (Common Instruction) பதிவிறக்கம் செய்து வாசித்து விண்ணப்பபடிவத்தினை பூரணப்படுத்தும் போது அவ்வறிவித்தல்களை கட்டாயமாக பின்பற்றுதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்ப படிவம் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை ஊடாக சமர்ப்பித்த மென் பிரதி செல்லுப்படியாகும் விண்ணப்ப படிவமாக ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக / ஏற்றுக்கொள்ளப்படாமை முறைமைக்கு பிரவேசிப்பதற்கு பயன்படுத்திய நடமாடும் தொலைப்பேசி இலக்கத்திற்கு குறும் தகவல் (SMS) ஊடாக அல்லது இலத்திரனியல் தபால் விலாசத்திய்கு (E-mail) அறிவிக்கப்படும்.*

*3.5. விண்ணப்ப படிவம் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி வரைக்கும் தமாதமாக்குவதால் ஏற்படும் எந்தவொறு சாதகமற்ற சூழ்நிலைகளை விண்ணப்பதாரர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.*

*குறிப்பு – நிகழ்நிலை விண்ணப்ப படிவங்ளை ஏற்றுக்கொள்ளுதல் 2026.06.05 ஆம் திகதி மு.ப. 9.00 க்கு திறக்கப்படுவதோடு, 2026 ஆம் ஆண்டு மாதம் 2026.06.26 திகதி பி.ப. 11.59 மணிக்கு நிறைவடையும்.*

*4. விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தல்;*

*4.1. மாகாண அரசாங்க சேவை / மத்திய அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களின் கையொப்பத்தனை சான்றுப்படுத்தல்:*

*விண்ணப்பதாரரின் கையொப்பம் விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் சான்றுப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை தனது நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட அதிகாரியினால் சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.*

*4.2. அரசாங்க சேவையில் இல்லாத விண்ணப்பதாரர்களின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தல்;*

*விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசு பாடசலையின் அதிபர் / பிரதேச கிராம அலுவலர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையர் / பொதுச் சட்டத்தரணி / முப்படைகளின் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி / பொலிஸ் சேவையில்*

வர்த்தமானி பதவியை வகிக்கும் அதிகாரி / அரசு அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கும் பதவி நிலை உத்தியோகத்தர் ஆகியோரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

5. பரீட்சை கட்டணம் மற்றும் நிர்வாகச் செலவுகள் ரூ. 1250/- ஆகும். இக்கட்டணத்தனை ஊவா மாகாணத்தின் பிரதான செயலாளரின் வருமான தலைப்பு 20.03.02.13 ற்கு வரவு வைக்கப்பட தக்கதாக ஊவா மாகாணத்தின் காணப்படும் எந்தவொறு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பணமாக செலுத்தி விண்ணப்பதாரரின் பேரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை விண்ணப்பப் படிவத்தில் பரிந்துரைக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப் பிரதி விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டியது கட்டாயமாணதாகுவதோடு, எதிர்கால பயன் கருதி பற்றுச்சீட்டின் நிகழ்ப்பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பயன்தக்கதாகும். ஊவா மாகாணத்தின் பிரசே செயலாளர் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டினை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டுக்கள், காசு கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படாத அதேவேலை அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணமானது எந்தவொறு காரணத்திற்காகவும் திரும்பப் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

6. இந்தப் போட்டிப் பரீட்சை, உப ஆவணம் - II இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை மண்டபங்களில் மாத்திரமே நடத்தப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும், அவ் உப ஆவணத்திற்கு ஏற்ப தாங்கள் பரீட்சையில் அமர்வதற்கு எதிர்ப்பார்க்கும் நகரத்தையும் மற்றும் நகர இலக்கத்தினையும் உப ஆவணம் - II இற்கு ஏற்ப சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, பரீட்சை நடாத்தப்படும் நகரங்கள் தொடர்பாக ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

7. ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துத் பரீட்சை பெறுபேறுகளின் ஏற்ப திறமையின் அடிப்படையில் தகைமைகளை பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்கள், மாவட்ட சன தொகையின் விகிதாசாரத்தின் அடிப்படையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கான பதவிகளுக்காக நியமனம் செய்யப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

8.

(அ) நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செல்லுப்படியாகும் திகதி ஆகியன நியமன அதிகாரியால் நிர்ணயிக்கப்படும். ஏதேனும் வெற்றிட எண்ணிக்கை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூரணப்படுத்தாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

(ஆ) முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, அச்சேவை பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு, தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணக் கோவை விதப்புரைகளுக்கு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு உட்பட்டதாக தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

(இ) நியமனம் ஒன்றிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் முதல் நியமனம் செய்யப்பட்ட பணி இடத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் கட்டாயமாக பணியாற்ற வேண்டும். இருப்பினும், நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் சிறப்புக் காரணங்களுக்காக, அக்காலம் முடிவடைவதற்கு முன்பே ஒரு உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யவதற்கு தேவை இருப்பின் நியமன அதிகாரிக்கு அது தொடர்பில் அதிகாரம் உண்டு.

(ஈ) இந்த நியமனம் மூன்று வருட நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டது. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மூன்று (03) ஆண்டுகளுக்குள் சேவை பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது வினைதிறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

*(எ) நியமனம் ஒன்றிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் தாங்கள் நியமனம் பெறுவதற்காக தகைமை பெற்றிருந்த மொழி மூலத்திற்கு 16.10.2020 திகதி பிரசுரிக்கப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதன் துணை சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகளுக்கு ஏற்ப தங்களால் ஏற்புடைய மொழித் தேர்ச்சியை பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.*

9. 25.03.2025 *திகதியிடப்பட்ட இலக்கம் 10/2025 னை கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையில் MN* 2 - 2025 *சம்பளக் குறியீடு இப்பதவிக்கு உரியதாகுவதோடு அதற்குரித்தான சம்பள அளவுத்திட்டம் ரூ.* 48,470 - 10 *x* 540 - 11 *x* 630 - 10 *x* 1010 - 10 *x* 1190 - 82,800/- *ஆகுவதோடு அச்சம்பளம்* 2027.01.01 *ஆம் திகதி தாங்களுக்கு உரித்தாகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து தங்களுக்கு இச்சுற்றறிக்கையின் உப ஆவணம் III இன் விதப்புரைகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.*

10. *இப்பதவியானது நிரந்தரமானது. ஓய்வூதியத்துடன் கூடியது. இப்பரீட்சையின் ஊடாக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.*

11. *மாவட்ட சன தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தல், உப ஆவணம் - I இல் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களினால் தாங்கள் போட்டியிடுவதற்காக தேர்ந்தெடுக்கும் வெற்றிடமாக காணப்படும் மாவட்டம் மற்றும் அதன் இலக்கத்தினை உப ஆவணம் – I ஏற்ப நிகழ்நிலை விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது சரியாக குறிப்பிடுதல் வேண்டும்.*

*(அ) சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திற்கும், அந்த மாவட்டத்தின் சன தொகைக்கு விகிதாசாரமாக வெற்றிட எண்ணிக்கையில் குறிப்பிட்ட எண்ணிக்கை ஒதுக்கப்படும். ஏதேனும் மாவட்டத்திற்கு நிரப்பப்பட வேண்டிய வெற்றிட எண்ணிக்கைக்கு போட்டியிடுவதற்கு தகைமைவாய்ந்தவர்கள் அம்மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆவார்கள்.*

- *I.* *ஏதேனும் மாவட்டத்திற்கு மேலே கூறப்பட்டுள்ளவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கை அம்மாவட்டத்திற்காக விண்ணப்பித்த தகைமை வாய்ந்த விண்ணப்பதாரிகளினால் நிரப்புவதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை அருகில் உள்ள மாவட்டத்திற்கு சனதொகைக்கு விகிதாசாரத்தின் அடிப்படையில் மீண்டும் வழங்கப்படும்.*
- *II.* *நிரப்புவதற்காக உள்ள முழு வெற்றிட எண்ணிக்கை சிறிதளவு எனின், அக்காரணத்தின் அடிப்படையில் மாவட்ட சனதொகை எண்ணிக்கையினை அடிப்படையாக கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் திறமை அடிப்படையில் தகைமை வாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*
- *III.* *பரீட்சையில் தேவையான குறைந்தபட்ச புள்ளிகளை பெற்றுக்கொண்ட எண்ணிக்கை ஒதுக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கையை விட குறைவாக காணப்படும் போது மாவட்ட சனதொகை அடிப்படையில் தேர்ந்தெடுத்தல் மேற்கொள்ளப்படமாட்டாது.*

*கவனிக்குக: ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கை என்பதனால் கருதப்படுவது அந்த நிர்வாக மாவட்டத்தின் சனதொகைக்கு விகிதாசார அடிப்படையில் அந்த மாவட்டத்திலிருந்து போட்டித் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கையை குறிப்பதுடன், அந்த நிர்வாக மாவட்டத்திற்குள் உள்ள அரசு நிறுவனங்களில் காணப்படும் உரிய சேவையின் வெற்றிட எண்ணிக்கை அல்ல என்பதை கவனத்தில் கொள்க.*

*(ஆ) மாவட்டத்திற்கு உறித்துடையவராவதற்காக இருக்க வேண்டிய தகைமைகள் – மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் வெற்றிட எண்ணிக்கைக்காக போட்டியிடுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் குறைந்தபட்சம் ஒன்றையாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

I. *விண்ணப்பதாரர் அந்த மாவட்டத்தில் பிறந்தவராக இருக்க வேண்டும்.*

*அவ்வாறு இல்லையெனில்*

II. *பரீட்சைக்காக தகைமைகளை பூரணப்படுத்த வேண்டிய இறுதித் திகதிக்கு முந்தைய ஐந்து (05) ஆண்டுகளுக்குள், அவர்/அவள் அம்மாவட்டத்திற்குள் குறைந்தபட்சம் மூன்று (03) தொடர்ச்சியான ஆண்டுகளுக்கு நிரந்தர வசிப்பவராக இருக்க வேண்டும்.*

*அவ்வாறு இல்லையெனில்*

III. *அவர் / அவள் தொடர்தேர்ச்சியாக 05 வருடங்கள் அம்மாவட்டத்திற்குள் தனது இரண்டாம் நிலைக் பாடசாலைக் கல்வியினை பெற்றிருத்தல் வேண்டும்.*

*குறிப்பு:*

1. *எழுத்து மூல பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முக பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொறு சந்தர்ப்பத்திலும் மேலே மாவட்டத்திற்கு உரித்தாகுவது தொடர்பில் சான்றுப்படுத்தற்காக பின்வரும் ஆவணங்கள் தேவையானவாறு முன்வைக்க வேண்டும்.*

   I. *பிறப்புச் சான்றிதழ்.*
   II. *கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் மற்றும் மூன்று (03) வருடங்கள் தொடர்தேர்சியான வதிவினை சான்றுப்படுத்துவதற்கான வாக்காளர் பட்டியல்.*
   III. *மாணவர் செயல்திறன் அறிக்கை.*

2. *யாதேனும் விண்ணப்பதாரர் ஒருவரின் தந்தை அல்லது தாய் அரச சேவையில், மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் இடமாற்றம் செய்யக்கூடிய பதவியில் இருந்தால், அந்த விண்ணப்பதாரர் தனது தந்தை அல்லது தாயின் பிறந்த இடத்தைத் தான் சார்ந்த மாவட்டமாகத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்படுவார். (இதற்காக, விண்ணப்பதாரரினால் தனது பெற்றோரினால் தனது பெற்றோர் பிறந்த இடத்தையும் மற்றும் அரசு, மாகாணப் அரசாங்க சேவை அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுகின்றார் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களை நேர்முக பரீட்சையில் அல்லது கோரப்படும் எந்த சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்க வேண்டும்).*

3. *எந்தவொரு விண்ணப்பதாரரும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்போது, மேலே 11(b)-இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைளுக்கு ஏற்ப வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கான மாவட்டத்தை தேர்ந்தெடுத்ததன் பின்னர் அதை மீண்டும் மாற்ற முடியாது.*

12. *இந்தப் போட்டித் பரீட்சை ஊடாக நிரப்பப்படவுள்ள வெற்றிட எண்ணிக்கையில் 3% மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகுதிபெறும் மாற்றுத்திறனாளிகளில் அதிகப்பட்ச புள்ளிகளில் 3% மாத்திரம் திறன் அடிப்படையில் நியமனம் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்படுவர். இதற்காக தகைமை பெறுவதற்காக பரீட்சையில் ஒவ்வொறு பாடத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தப்பட்சம் நாட்பது (40%) புள்ளிகளையேனும் விண்ணபதாரிகளினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன்,*

பரீட்சையின் மொத்த புள்ளிகளில் ஐம்பது (50%) புள்ளிகளையோனும் பெற்றிருத்தல் வேண்டும். பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 27/88 ன் விதப்புரை மாற்றுத்திறனாளிகள் அடிப்படையில் ஆட்ச்சேர்ப்பு செய்வதற்கு பொருந்தும்.

குறிப்பு: நிகழ்நிலை விண்ணப்ப படிவத்தினை பூரணப்படுத்தும் போது தாம் மாற்றுத்திறனாளி நிபந்தனை அடிப்படையில் விண்ணபிப்பதாக குறிப்பிட வேண்டியதுடன் மாற்றுத்திறனாளி அற்ற ஒருவர் போலியாக மாற்றுத்திறனாளியாக குறிப்பிடக் கூடாது.

13. பரீட்சை பாட விதானம்:

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தாம் பரீட்சை எழுதும் ஒரு மொழி மூலத்தினை தெரிவு செய்துக்கொள்ள வேண்டியதுடன் பரீட்சைக்கான சகல வினாத்தாள்களுக்கும் அம்மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை வினாப்பத்திரங்கள் இரண்டுடன் கூடியதாக காணப்படும்.

| தொடர் இலக்கம். | விடயம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| 01 | மொழித் திறன் | 100 | 2 ½ மணித்தியாலங்கள் |
| 02 | உளச்சார்பு | 100 | 1 மணித்தியாலம் |

(01) மொழித்திறன்:

இந்த வினாத்தாளில், பரீட்சார்திகளின் கருத்து வெளிப்படுத்தல் திறன், புரிந்துகொள்ளும் திறன், எழுத்துப்பிழை, மொழி மற்றும் கட்டுரை எழுதுதல், தரப்பட்டுள்ள ஒரு கடிதத்தினை வரைவு செய்தல், வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வரைபுகளை மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல், தரப்பட்டுள்ள ஒரு உரையைச் சுருக்கி எழுதுதல், தரப்பட்டுள்ள பல வாக்கியங்களின் பொருளை ஒரே வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கணத்தைப் பயன்படுத்துதல் ஆகிய திறன்களைச் பரிட்சிக்கும் வினாக்களுடன் கூடியதாக காணப்படும். அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும்.

(02) உளச்சார்ப்பு:

இந்த வினாத்தாளில், விண்ணப்பதாரர்களின் புள்ளிவிவரத் திறன்கள், பகுத்தறியும் திறன் மற்றும் பொது அறிவு ஆகியவற்றை அளவிடும் வகையில் வினாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 50 பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடை வினாக்கள் உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

குறிப்பு:

(அ) கடமை நடவடிக்கைகளுக்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகள் மற்றும் திறன்களையும் பரிசீலனை செய்வதற்காக இவ்வினாத்தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்தப் போட்டிப் பரீட்சையின் ஊடாக நியமனம் பெறுவதற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொறு விடயத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தப்பட்சம் நாட்பது (40%) விண்ணப்பதாரிகளினால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் பரீட்சையின் மொத்த புள்ளிகளில் ஐம்பது (50%) புள்ளிகளையேனும் பெற்றிருத்தல் வேண்டும். போட்டித் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்கள் எண்ணிக்கையை நிரப்புவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் முன்னரிமை வரிசையினை நிச்சயமாக பின்பற்றி நியமனங்கள் வழங்கப்படும்.

14. பரீட்சை அறிவுறுத்தல்கள்

I. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் எனும் அடிப்படையில் விண்ணப்ப படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு

முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தி விண்ணப்ப படிவத்தினை சரியாக நிகழ்நிலை ஊடாக சமர்ப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நிகழ்நிலை ஊடாக மாத்திரம் பரீட்சை அனுமதியட்டை வழங்கப்படும்.

II. பரீட்சை நடைபெறுவதற்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்தாக அனுமதி அட்டைகள் மின்னஞ்சல் *(E-mail)* மூலம் அனுப்பப்படுவதோடு, பரீடசைக்காக விண்ணப்பிக்கும் போது மின்னஞ்சல் முகவரியினை சரியாக குறிப்பிடுட்டிருத்தல் வேண்டும். பரீட்சை திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்னதாக அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அது தொடர்ப்பில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் விண்ணப்ப படிவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி, பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியுடன் அனுமதி அட்டையினை அனுப்புவதற்காக வட்ஸ்அப் *(WhatsApp)* இலக்கம் ஒன்றினை குறிப்பிட்டு கோரிக்கை ஒன்றினை முன்வைக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக *https://exams.psc.up.gov.lk/admission/* இணைப்பின் ஊடாக பரீட்சை அட்டையினை பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகள் மேற்கொள்ளப்படும். அதற்கேற்ப இணையதளத்திலிருந்து அனுமதி அட்டையினை பதிவிறக்கம்செய்து பரிசீலித்து திருத்தங்கள் இருந்தால் குறித்த நிரையில் திருத்தப்பட வேண்டிய விதத்தினை சரியாக குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் கையொப்பம் இடபட்டிருத்தல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளை கொண்டுள்ளார் எனக் கருதப்படாது.

III. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரிகள் கையொப்பத்தினை சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரி தமது கையொப்பத்தினை நிறுவன தலைவரின் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாகவும் ஏனைய விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அரசு பாடசலையின் அதிபர் / ஓய்வுப்பெற்ற உத்தியோகத்தர், பிரதேச கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையர், பொதுச் சட்டத்தரணி, முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட மேற்பார்வை அதிகாரி, பொலிஸ் சேவையில் வர்த்தமானி பதவியை வகிக்கும் அதிகாரி, அரசு அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கும் நிரந்தர நிரைவேற்று தர அதிகாரி அல்லது பௌத்த விகாரையின் பொறுப்பாளர் அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத ஸ்தலங்களின் பொறுப்பாளர் அல்லது மத குருமாரில் குறிப்பிடப்பட்ட அந்தஸ்தினை கொண்டுள்ளவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

IV. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வழங்குதல் தொடர்பில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். அவ்விதிமுறைகள் மீறப்பட்டால் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தண்டனைக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

15. பரீட்சைக்கு உள்வாங்குதல்:

(அ) பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகளினால் தமது கையொப்பத்தினை சான்றுப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையினை முதலாவதாக பரீட்சைக்கு தோற்றும் திகதியன்றே அப்பரீட்சை மண்டப பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறான அனுமதி அட்டையினை சமர்பிக்காத விண்ணப்தாரர் ஒருவருக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படக் கூடாது.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவர் தமக்கு நிர்ணயிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

குறிப்பு: விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளை கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படுவதாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

16. பரீட்சார்தியின் ஆள்அடையாளம்:
பரீட்சை விண்ணபதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரி ஏற்றுக்கொள்ளும் விதத்தில் தனது ஆள் அடையாளத்தினை உறுதி செய்தல் வேண்டும். இதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுப்படியாகும் கடவுச்சீட்டு
III. செல்லுப்படியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

பரீட்சை விண்ணப்பதாரிகள் ஆள் அடையாளத்தினை உறுதிச் செய்யக்கூடியவாறு முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்களை அணியவில்லை என உறுதிச்செய்வதற்கு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்கு உட்செல்லுதல் வேண்டும். அவ்வாறு தனது ஆள் அடையாளத்தை உறுதிச்செய்வதனை தவிர்க்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உட் செல்ல அனுமதி வழங்கப்படாது. அத்துடன் பரீட்சை மண்டபத்திற்குள் சென்ற தருனம் முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காமல் வைத்திருக்க வேண்டும்.

17. பரீட்சை பெறுபேறுகள்:

விண்ணப்பதாரிகளிடம் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் அறிவிப்பது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அஞ்சல் ஊடாகவோ அல்லது இணையத்தனம் ஊடாகவோ மேற்கொள்ளப்படும்.

18. போலியான தகவல்களை வழங்குதலிற்கான தண்டனைகள்

I. விண்ணப்ப படிவத்தினை நிரப்பும் போது மிகவும் அவதானத்துடன் சரியாக தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் குறித்த விதிமுறைகளுக்கு ஏற்ப யாதாயினும் விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவர் என தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைப்பெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படுவதற்கு இடமுண்டு.

II. பரீட்சார்த்தி ஒருவரினால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானவை என பிற்காலத்தில் தெரியவந்தால் அவர் வேண்டும் என்றே ஏதேனும் விடயத்தினை ஒழித்துள்ளார் என தெரிய வந்தால் அவரிட்கு நியமனம் ஒன்றினை வழங்குவது தொடர்பில் கருத்தில் கொள்ளப்படாததுடன் இப்பரீட்சையின் காரணமாக வழங்கப்பட்டிருந்த நியமனத்தினை இரத்து செய்வதற்கோ அல்லது சேவையிலிருந்து விலக்குவதற்கோ கீழ்ப்படிதல் வேண்டும்.

19. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் காரணங்கள் இருந்தால் அதுதொடர்பில் ஊவா மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவுறுத்தலின் அடிப்படையில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

20. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலின் மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

21. இது தொடர்பிலான மேலதிக விடயங்களை அலுவலக நேரத்தினுள் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலக தொலைப்பேசி இலக்கம் 0552222400, 0552231460 இற்கு அழைப்பினை மேற்கொள்ளுவதன் ஊடாக பெற்றுக்கொள்ள இயலும்.

(எல்.ஏ. சோமரத்ன)
செயலாளர்
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை
ஆணைக்குழு

2026.05.26 ஆம் திகதி,
பதுளை
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திலிருந்து.

உப ஆவணம் – I

மாவட்ட பெயர்ப் பட்டியல் மற்றும் இலக்கம்

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |

உப ஆவணம் – II

பரீட்சை மத்திய நிலையம் காணப்படும் நகரம்

| இலக்கம் | மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| 22 | பதுளை | பதுளை | 01 |
| | | பண்டாரவளை | 02 |
| | | மஹியங்கனை | 03 |
| 23 | மொணராகலை | மொணராகலை | 04 |
| | | வெல்லவாயை | 05 |
| | | பிபிலை | 06 |